**செய்தி வெளியீடு** **நாள் : 1.2.2025**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மாதவரம் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.**

**•••••••••**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (01.02.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மாதவரம் சட்டமன்ற தொகுதி, புழல், மகாலஷ்மி நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பள்ளி கட்டிடத்தினையும் மற்றும் புழல், இரட்டைமலை சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள கால்பந்து விளையாட்டு மைதானத்தை ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வரும் பணிகளையும், பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகர் பேருந்து நிலையத்தை ரூ.11.26 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வரும் பணிகளையும், முல்லை நகர் பேருந்து நிலையத்தை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வரும் பணிகளையும், மகாகவி பாரதி நகர், முல்லை நகர் பேருந்து நிலையம் அருகில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய சமுதாய நலக்கூடத்தின் இடத்தினையும் **மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் இ.ஆ.ப. அவர்கள், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர் அவர்கள், மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.எஸ்.நந்தகோபால், திரு.நேதாஜி யூ. கணேசன், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் திரு.நெடுஞ்செழியன், மண்டல அலுவலர்கள் திரு.திருமுருகன், திரு.சரவணமூர்த்தி, செயற்பொறியாளர்கள் திரு.ராஜன்பாபு, திரு.கார்த்திகேயன், உள்ளாட்சி பிரதிநிதி திரு.புழல் எம். நாராயணன், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified @ RealEstate ™